**ஐ.டி.எண்.4/2024** 06.02.2026

**நி.த.சாட்சி 1 தன்சீர்அகமத் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்த நி.த.சா.ஆ.1 வரிசை ஆவணங்களில் பதிவு தபாலில் அனுப்பியதற்கான ரசீது மற்றும் பதிவு எண் காணப்படவில்லை என்றால் சரிதான். அந்த அஞ்சல் உறைகளில் 13 இலக்க பார்கோடு ஸ்டிக்கர் ஒட்டப்படவில்லை என்றால் சரிதான். பதிவு தபாலில் அனுப்பியதற்கான ரசீதை நாங்கள் வைத்துள்ளோம் ஆனால் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நி.த.சா.ஆ.1 வரிசையில் காணப்படும் தபால் உறையில் தபால் அலுவலகத்தின் முத்திரையில் தேதி அனைத்தும் கையால் எழுதப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. மனுதாரரின் முகவரி பெரியாங்குப்பம் ஆனால் நாங்கள் ஆலாங்குப்பம் என்ற முகவரிக்கு அனுப்பியுள்ளோம் என்றால் சரிதான். தவறான முகவரிக்கு அனுப்பிவிட்டு தொழிலாளி அறிவிப்பை வாங்கவில்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. நி.த.சா.ஆ.1-ல ட்ராக்கிங் ஐ.டி இல்லாததால் இதனை பதிவு தபாலாக கருத முடியாது என்றால் சரியல்ல. மூன்று தபால் உறைகளிலும் unclaimed returned to sender என்று ஒரே கையெழுத்தில் எழுதப்பட்டுள்ளதால் இதனை நாங்களே எழுதிக்கொண்டோம் என்றால சரியல்ல. மூன்று கடிதங்களுக்கும் இடையே ஒன்றரை வருடம் இடைவெளி உள்ளது ஆனால் தபால் உறையில் எழுதப்பட்ட கையெழுத்து ஒரே மாதிரியாக இருப்பதால நாங்களே எழுதிக்கொண்டோம என்றால் சரியல்ல. இந்த ஆவணங்களை வழக்கிற்காக நாங்களே தயாரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. மனுதாரரின் ஊர்காரர்களிடம் அவரை வேலைக்கு வரும்படி சொல்லி அனுப்பினோம் அந்த ஊர்காரர்களின் பெயர் ஞாபகம் இல்லை. சட்ட விரோதமாக அவரை பணிநீக்கம் செய்து விட்டு 2020-ல் இருந்து அவர் வேலைக்கு வரவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2020-ல் இருந்து மனுதாரரே வேலைக்கு வராதபட்சத்தில் 2023-ல் தொழிலாளர உதவி ஆணையர முன்பு மனுதாக்கல செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரருக்கு எதிராக குற்றப்பத்திரிகை அளிக்கப்படவில்லை, உள்துறை விசாரணை எதுவும நடைபெறவில்லை. தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு பதில் அளிக்காமலும் நேரில்

ஆஜராகாமலும் தவிர்த்து வந்தோம் என்றால் சரியல்ல. சட்ட விசயங்களை நாங்கள் மதிக்கவில்லை இதிலிருந்து நிருபணமாகிறது என்றால் சரியல்ல. முகவரி சரியாக இல்லாமல், பதிவு எண் இல்லாமல், முத்திரையில் கையால் எழுதப்பட்ட கடிதம் அனைத்தும் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. சட்ட விரோதமாக அவரை பணிநீக்கம் செய்துவிட்டு அவராக வேலைக்கு வரவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.02.06 16:47:23 +0530